# திராவிடப் போராளிகள்

**39** ■ வழக்கறிஞர் அருள்மொழி

**ம**றைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...




## ‘கல்வி விளக்கு’ காந்தம்மா!

*1940*-ஆம் ஆண்டின் தொடக்கக் காலத்தில் கல்வித் துறையில் அலுவலராகப் பணியாற்றி வந்த முற்போக்குச் சிந்தனைகள் கொண்ட ஓர் இளைஞருக்கு அஞ்சலில் ஒரு கடிதம் வந்தது. அவர் எதிர்பார்த்துக் கொண்டிருந்த இளம் ஆராய்ச்சியாளர் பதவிக்கான கடிதமல்ல அது. மாறாக, ஒரு பெண்ணிடம் இருந்து வந்த கடிதம்.

“நான் எனக்காக இக்கடிதத்தை எழுதவில்லை. என் தோழிக்காக எழுதுகிறேன். என் தோழியின் ஒப்புதலோடு இதை எழுதுகிறேன்.

ஒவ்வொரு முறையும் உங்கள் கண்ணில் நாங்கள்பட்ட நொடியில் நீங்கள் வேறு பக்கம் திரும்பி விட்டீர்கள்; எங்களை ஏறிட்டுப் பார்க்கவில்லை. மாறாக நாங்கள், சற்றுத் தொலைவில் இருந்தபடியே பலமுறை உங்களை கவனித்து இருக்கிறோம்.

உங்கள் உரையாடல்களில் இருந்து, நீங்கள் சமுதாயம் பொருளியல் பற்றி முற்போக்குக் கருத்துடையவர் என்று எங்களுக்குத் தோன்றியது. சாதியற்ற சமுதாயத்தை உருவாக்க அவாவுகிறீர்கள் என்று புரிந்தோம். ஒருமுறைக்குப் பலமுறை நீங்கள், உங்கள் நண்பரிடம் அப்படிக் கூறியதைக் கேட்டதால்தான் என் தோழிக்குத் துணிச்சல் வந்தது. இருப்பினும் தானே எழுதத் தயக்கம்.

என் தோழி தங்களை மணக்க விரும்புகிறாள். அக்கருத்தினை உங்களுக்குத் தெரிவிக்கவே, இக்கடிதத்தை நான் எழுதுகிறேன்...

எக்காரணம் பற்றியும் இதனை நீங்கள் விரும்பாவிட்டால், தயவு செய்து என்னையும் என் தோழியையும் மன்னித்து விடுங்கள்.....” என்று தொடர்கிறது அக்கடிதம்.

அந்தக் கடிதத்தைப் பெற்றுக்கொண்ட அந்த இளைஞர், இப்படி பதில் அஞ்சல் அனுப்பினார்.

“நம் பழமையான சங்க இலக்கியத்தில் தலைவி, தலைவன் மேற்கொள்ளும் காதலை, தோழியொருத்தி வழியாகச் சொல்லியனுப்புவதே மரபு என்று கற்றிருக்கிறேன். அதனால் உம்முடைய கடிதம் என்னை அதிர்ச்சியில் ஆழ்த்தவில்லை. மாறாக என்னை வியப்பில் மூழ்க வைத்தது... நான் பிறவி பற்றி, சமுதாய ஏணியின் உச்சிப் படிக்கட்டில் இல்லாவிடினும், அதற்கு அடுத்து நிற்பதைக் குற்றமாகவே கருதுகிறேன். அதேபோல், சாதியில் மேல்கீழ் பாராட்டாத ஒருவனோடு வாழ்க்கை நடத்துவதைப் போன்றே, செல்வத்தைப் பொருட்படுத்தாத, குவிக்க இசையாத ஒருவரோடு வாழ்க்கை நடத்த நேரிடும் என்பதை உம் தோழி உணர்ந்திருக்கிறாரோ என்னவோ. இதை உம் தோழிக்குச் சொல்லி, தேவைப்பட்டால் பதில் எழுதவும்”.

> **இராஜாஜியின் குலக்கல்வி முயற்சிகள் நடைபெற்ற காலத்தில் சுயமரியாதைக் கொள்கையோடு பணியாற்றிய காந்தம்மா- சுந்தரவடிவேலு அவர்கள் குடும்பம் மிகுந்த தொல்லைகளைச் சந்தித்தது.**

### கற்றோரைக் கற்றோர் காமுறுதல்

அந்தக் கடிதத்தை எழுதிய தோழியின் பெயர் தெரியவில்லை. ஆனால், யாருக்காக எழுதப்பட்டதோ அந்தப் பெண்ணின் பெயர் காந்தம்மா. தாவரவியல் பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்று சென்னை பல்கலைக் கழகத்தில் முதுநிலை அறிவியல் ஆராய்ச்சி (M.SC) படித்துக் கொண்டிருந்தார்.

காந்தம்மாவின் தந்தை திருவாரூர் சுப்ரமணியம். தாயார் தங்கம்மாள். காந்தம்மாவின் தமக்கையார் பெயர் குஞ்சிதம், தங்கையின் பெயர் வெங்கடேசம்மாள். குஞ்சிதம் - குருசாமி அவர்களின் திருமணம்தான் தந்தை பெரியார் தன் சொந்த செலவில் நடத்திவைத்த முதல் சுயமரியாதைக் கலப்புத் திருமணமாகும்.

அந்தக் கடிதம் யாருக்கு எழுதப்பட்டது என்றால், **நெய்யாடுப்பாக்கம் துரைசாமி முதலியாரின் மகனான சுந்தரவடிவேலு** என்பவருக்கு எழுதப்பட்டது. அவரோ ‘எந்தக் கன்னியின்பாலும் நான் காதல்கொள்ளவில்லையே ஒழிய, ஒரு கொள்கையின்மேல் தணியாக் காதல் கொண்டிருந்தேன். நான் பிறந்த சாதிக்கு மட்டும் உரியவனாக வாழ்வதில்லை; மனித சாதியைச் சேர்ந்தவனாகவே வாழ்வது என்னும் கொள்கைக்கு வாழ்க்கைப்பட்டுவிட்டேன்’ என்ற உறுதியுடன் இளம் வயதிலேயே தந்தை பெரியாரின் கொள்கைகளைப் பின்பற்றி வாழ்ந்தவர்.

நெ.து.சுந்தரவடிவேலு என்ற பெயர் தமிழ்நாட்டின் கல்வித்துறை வரலாற்றில் அழிக்க முடியாத சாதனைகளைப் படைத்த ஒரு மாமனிதரின் பெயர் என்பது மிகையல்ல. கல்வித்துறை அலுவலராகவும் அதிகாரியாகவும் ஆராய்ச்சியாளராக வும் பணியாற்றி, சென்னைப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக உயர்ந்தவர்.

### சமூகம் மகிழ தாலி

இளம்வயதிலேயே சாதி அமைப்பின் மீது வெறுப்புக் கொண்டு சுயமரியாதை இயக்கத்தவர்களோடு கொண்ட தொடர்பால் **‘குடி அரசு’** ஏட்டின் மீது பற்று கொண்டவர். **குத்தூசி குரு சாமி** அவர்களது நட்பினால் அவர்களது இல்லத்துக்குச் சென்று உரையாடிய சில செய்திகளைக் கொண்டே காந்தம்மா அவரை மணக்க விரும்பினார்.

காந்தம்மாவின் தந்தை இசை வேளாளர் சமூகத்தின் நிலையை மாற்ற வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். தம் பெண்களைப் பட்டதாரிகளாக, ஆசிரியர் பயிற்சியும் பெற்றவர்களாகச் சுயமரியாதையோடு வாழவேண்டும் என்ற குறிக்கோளுடன் வளர்த்தார். தந்தை பெரியார் மீது மட்டற்ற மதிப்புக் கொண்ட அவர், காந்தம்மாவின் திருமணத்தைப் பற்றித் தந்தை பெரியாரிடம் பேசினார்.

நெ.து.சுந்தரவடிவேலு அவர்களை நன்கு அறிந்தவரான தந்தை பெரியார், அவரோடு உரையாடல் நிகழ்த்தியதுடன், அவரது தந்தையிடம் பேசவும் முன்வந்தார். படித்தவர்கள் சாதியடுக்கின் மேல்நிலையில் இருப்பவர்கள் இத்தகைய மாற்றங்களை முன்னெடுத்தால் அது பெரிய கொள்கைப் பிரச்சாரமாகும் என்றார். ஆனால் நெ.து.சு அவர்கள் பிடிவாதமாக அதனை மறுத்து எளிய முறையில் பதிவுத் திருமணம் செய்யலாம் என்றார். கடைசியாக அவரிடம் தந்தை பெரியார் வைத்த கோரிக்கை வியப்பிற்குரியது. “தாலி மட்டும் கட்டுங்கள்” என்பதே அந்தக் கோரிக்கை.

“அந்த அடிமை அடையாளம் எதற்கு?" என்ற கேள்விக்குத் தந்தை பெரியார் "அந்தச் சமுதாயம் பெரிதும் ஏமாற்றப்பட்ட சமுதாயம். தாலி கட்டும் அளவு இசைந்தால் சிறிது நிறைவு இருக்கும்” என்றார்.

நெ.து.சு.- காந்தம்மா திருமணம் *25.10.1940* அன்று சென்னையில் பதிவாளர் அலுவலகத்தில் வைத்து எளிமையான முறையில் நடைபெற்றது. அதற்காக அவர்களுக்கு ஒரு பாராட்டுக் கூட்டம் *27.10.1940* அன்று சென்னை கோகலே மண்டபத்தில் நடத்தினார் தந்தை பெரியார்.

### மொட்டைக் கடித அச்சுறுத்தல்

அதன் பின் காந்தம்மா அவர்கள் சுயமரியாதை இயக்க நிகழ்வுகளிலும் பங்கேற்கத் தொடங்கினார். பல மாநாடுகளில் உரையாற்றினார். *1946*-ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற திராவிடர் கழக மாநாட்டில் கொடி ஏற்றி வைத்து உரையாற்றினார். ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டே திராவிடர் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்றார். அதற்கிடையில் நெ.து.சுந்தர வடிவேலு அவர்கள் தந்தை பெரியாருக்கு நெருக்கமானவர் என்பதால், அவர் மீது புகார் சொல்லி அரசுக்கு ‘மொட்டைக் கடிதங்கள்’ சென்றன.

இராஜாஜியின் குலக்கல்வி முயற்சிகள் நடைபெற்ற காலத்தில் சுயமரியாதைக் கொள்கையோடு பணியாற்றிய காந்தம்மா-சுந்தரவடிவேலு அவர்கள் குடும்பம் மிகுந்த தொல்லைகளைச் சந்தித்தது. எனவே காந்தம்மா அவர்களால் முழுமையாக இயக்க நிகழ்வுகளில் பங்கேற்க முடியாமல் போயிற்று. ஆயினும் தந்தை பெரியாரின் பாதையில் இருந்து அவர் விலகவே இல்லை.

காந்தம்மா அவர்களுக்கு ஒரே மகன் பிறந்தார். அந்நாளிலேயே மகனுக்குக் கா.சு. திருவள்ளுவன் என்று தாயின் பெயரின் முன்னெழுத்தையும் பெயரிட்டனர். அந்த மகன் இளம் வயதில் இறந்துவிட்டார்.

### இளம்தலைமுறையைச் செதுக்கிய ஆசிரியர்

ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டே பல்வேறு துறைகளில் பொறுப்பேற்று சிறந்த இளம்தலைமுறையை உருவாக்க உழைத்தார் காந்தம்மா. தமிழ்நாடு மாநிலப் பெண்கள் சாரணியர் இயக்கத்தின் ஆணையராகச் சிறப்பாகப் பணியாற்றினார். சிறுவர் செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் பல கல்விக் குழுமங்களின் ஆலோசகராக இருந்தார். தன் முயற்சியால் சென்னைப் பல்கலைக்கழகத்தின் (SYNDICATE) பேரவை உறுப்பினராக, பட்டதாரிகளுக்கான தொகுதியில் தேர்தலில் நின்று வெற்றி பெற்றார்.

இத்தனை பொறுப்புகளை ஏற்றபோதும் திராவிட இயக்கத்தின் கொள்கையினின்று வழுவாமல், தந்தை பெரியாரின் தொண்டராகவே வாழ்ந்த, காந்தம்மா அவர்கள் உடல்நலக் குறைவால் *1984* ஆம் ஆண்டு மறைந்தார். அவரது தொண்டுக்கு மரியாதை செய்யும் முறையில் *5.12.1984* அன்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்களால் பெரியார் திடலில் நீதியரசர் வேணுகோபால் அவர்கள் தலைமையில் இரங்கல் கூட்டம் நடைபெற்றது.

பாய்ந்து வரும் பேராறு போல் உழைப்பவர்களைப் போன்றே ஓசையற்ற நீரோடை போல் உழைப்ப வர்களும் சேர்ந்ததே திராவிட இயக்கம். அதன் வரலாற்றில் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளாமலே வாழ்ந்து முடித்த போராளிகளை நினைவூட்டுவதே காந்தம்மா அம்மையாரின் வாழ்க்கை.

(வருவார்கள்...)

---

## அயல் விவகாரங்களிலும் இந்தியாவில் வதந்திகள்!

இஸ்ரேல்-பாலஸ்தீனப் பிரச்சினை விவகாரம் உலகின் கண்முன் நிகழும் கொடூரமாக அரங்கேறி வருகிறது. ‘எங்களின் முழுபலத்தையும் பயன்படுத்தி யுத்தம் செய்கிறோம்’ என முழங்குகிறது இஸ்ரேல். மின்சாரம், உணவு, தண்ணீர் கிடைக்க வழியின்றி பாலஸ்தீன மக்கள் போருக்கும் வாழ்வுக்கும் இடையில் தவித்து வருகின்றனர். இந்த நிலையில், பாலஸ்தீன இயக்கங்கள் குறித்த வதந்திகள் இந்தியாவில் இருந்து அதிகம் பகிரப்படுவதாக அதிர்ச்சியான தகவல்களை, சர்வதேச ஊடகங்கள் வெளியிட்டுள்ளன. பாலஸ்தீன இயக்கங்களுக்குப் பெண் குழந்தைகள் பாலியல் அடிமைகளாகக் கொண்டு செல்லப்படுகிறார்கள் என பள்ளி வாகனத்தைக் காட்டியும், ஹமாஸ் ஒரு யூதக் குழந்தையைக் கடத்திச் செல்வதாகவும் போலி செய்திகள், இந்தியாவில் இருந்து அங்கீகரிக்கப்பட்ட X பக்கங்களில் பகிரப்பட்டு, அவை பலராலும் மறுபரவல் செய்யப்படுகிறது. இந்தத் தகவல்கள் எதற்கும் ஆதாரங்கள் இருப்பதில்லை என உண்மை அறியும் தளங்கள் சுட்டிக்காட்டுகின்றன. இஸ்லாமியர்கள் மீதான வெறுப்புணர்வே, இந்தியாவில் இருந்து அதிக வதந்திகள் பகிரப்படுவதற்குக் காரணம் என்றும் செய்திகள் கூறுகின்றன. இந்த வதந்திகளுக்குப் பின்னால் யார் இருப்பார்கள் என்பதை நாம் குறிப்பிடத் தேவையில்லை. ஆளும் பா.ஜ.க. அரசு இஸ்ரேல் ஆதரவு நிலை எடுத்துள்ள நிலையில், அவர்கள் வளர்க்கும் வதந்திகளின் குழந்தைகள் என்ன செய்வார்கள் என நமக்குத் தெரியாதா?

## ஃப்ளாஷ்பேக்



### மின்சாரக் கோரிக்கை!

**த**மிழ்நாடு மின்சார வாரிய தலைமைச் செயலகத்தில் 1973 -ஆம் ஆண்டு பிப்ரவரி 20 அன்று ‘வாரிய தலைமைச் செயலகச் சங்க’ ஏற்பாட்டில், சங்கத்தின் 5-ஆம் ஆண்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தலைவர் கலைஞரை நேரில் சந்தித்து அழைப்பு விடுத்தபோது “கோரிக்கை ஏதேனும் உள்ளதா?” என்று கேட்டார். “எதுவும் இல்லை நீங்கள் விழாவில் பங்கேற்றால் மட்டும் போதும்” என்றோம். விழா தொடங்குவதற்கு 20 நாட்களுக்கு முன்பே கவிஞர் கருணானந்தம் அவர்களைக் கோரிக்கை ஏதும் உள்ளதா என்று மீண்டுமொருமுறை விசாரிக்கச் சொல்லியுள்ளார் தலைவர். நாங்கள் 7 கோரிக்கைகளை எழுதி, அவரிடம் அளித்தோம். விழா நாளன்று தலைவர் கலைஞர் அதில் 5 கோரிக்கைகளை நிறைவேற்றுவதாகத் தெரிவித்தார். எங்களுக்கெல்லாம் இது மட்டற்ற மகிழ்ச்சியை அளித்தது. உடன் அன்றைய மின்சாரத் துறை அமைச்சர் ஓ.பி.ராமன், ஒரத்தநாடு சட்டமன்ற உறுப்பினர் எல். கணேசன் மற்றும் மின்சார வாரிய நிர்வாகிகள் இருந்தார்கள்.



தருமராசன்

**-மா.தருமராசன், தொழிலாளர் துணை ஆணையாளர் (ஓய்வு), ஒரத்தநாடு.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### மருத்துவக் கட்டமைப்பு

**1966-இல் தமிழ்நாட்டிலிருந்த 9 மருத்துவக் கல்லூரிகளில் ஒன்று தனியார் கல்லூரி. மாவட்டங்கள் தோறும் மருத்துவக் கல்லூரிகள் தொடங்கவேண்டுமென்ற தி.மு.க.வின் நோக்கத்தின் பலனாக, 2010-இல் எம்.பி.பி.எஸ் மற்றும் பட்ட மேற்படிப்பு மருத்துவக் கல்லூரிகள் 17 ஆகவும், பி.டி.எஸ் மற்றும் செவிலியர் போன்ற இதர மருத்துவப் படிப்புக் கல்லூரிகள் 33 ஆகவும் அதிகரித்தன.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 273




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.